Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 353

செவ்வாய்க்கிழமை 14 நவம்பர் 2023

ஐப்பசி 28 ஆம் நாள் ... 2054



## 2024 பாதீட்டில்
# மாகாணசபையை வலுப்படுத்தும் திட்டங்கள் சில முன்மொழிவு

**கொழும்பு, நவம்பர் 14**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024ஆம் நிதியாண்டுக்காக முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் மாகாணசபையை வலுப்படுத்தும் சில முன்மொழிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாகாணசபைக்கு வழங்கப்பட்டு பிரயோகிக்கப்படாத அதிகாரங்களைப் பயன்படுத்தும் முன்மொழிவும் உள்ளது.

»11

## பாதீட்டின் ஏனைய பிரதான விவரங்கள்

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். அத்துடன், வீடமைப்புத்

»11

## யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்
# பாலியாற்றுத் திட்டத்தை தொடங்க ரூ.250 மில்.

கொழும்பு, நவ. 14

யாழ். குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வாக பாலி ஆறு நீர் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதற்கான ஆரம்பகட்ட செலவுக்காக 250 மில்லியன் ரூபா செலவிடப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

»09

# தேர்தல் 'பட்ஜெட்'!
## தோலுரிக்கிறது எதிரணி

கொழும்பு, நவ. 14

2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலை இலக்குவைத்தே வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

»11

## அரச பணியாளர்களுக்கு
# சம்பள உயர்வு
## கிடைக்கும்; ஆனால்..?
### 'செக்'வைத்த ரணில்

கொழும்பு, நவ. 14

அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தக் கொடுப்பனவு ஏப்ரல் மாதம் முதலே கிடைக்கும் என்றும், ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான கொடுப்பனவு ஒக்ரோபரிலிருந்து 6 மாதங்

»11

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க மேலதிக நிதி

கொழும்பு, நவ. 14

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காக 2024ஆம் ஆண்டுக்கான

»11

# ஆள்வோருக்கு சொர்க்கம் மக்களுக்குத்தான் நரகம்



## பட்ஜெட் குறித்து சஜித் விமர்சனம்

கொழும்பு, நவ. 14

வரவு - செலவுத் திட்டம் ஊடாக ஆட்சியாளர்களுக்கு சொர்க்கத்தையும், மக்களுக்கு நரகத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காண்பித்துள்ளார். இது சில்லறைத்தனமான பாதீடாகும் என்று

»11

## மட்டு. மயிலத்தமடுவில்
# சட்டவிரோதக் குடியேறிகளை உடனடியாக வெளியேற்றுக!
## ஏறாவூர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

மட்டக்களப்பு, நவ. 14

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய சட்டவிரோதமாகக் குடியேறிய விவசாயிகளை உடனடியாக வெளியேற்றுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் அதிரடியாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

»11

# துண்டுவிழும் தொகை ரூ. 2,851 பில்லியன்

கொழும்பு, நவ. 14

2024ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டில் துண்டு விழும் தொகையாக 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

»09

## சீரற்ற காலநிலையால்
# பலாலி வந்த விமானம் சென்னைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம், நவ. 14

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த விமானம் சென்னைக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

»09

## வங்களா விரிகுடாவில் 2 காற்றுச் சுழற்சிகள்
# வடக்கு - கிழக்கில் இன்றும், நாளையும் 200மி.மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 14

வங்களா விரிகுடாவில் 2 காற்றுச் சுழற்சிகள் ஒரேநேரத்தில் தோற்றம் பெற்றுள்ளன. இதன் காரணமாக இன்றும் நாளையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 200 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த

»11

# நல்லூர்க் கந்தன் கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 14

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத உற்சவம் இன்று செவ்

»09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் இன்று சுனாமி ஒத்திகை!

மன்னார், நவ. 14

மன்னாரில் இன்று சுனாமி ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது என்றும், பொதுமக்கள் அதனால் அச்சமடையத் தேவையில்லை என்றும் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

திடீரென ஏற்படும் சுனாமிப் பேரழிவில் இருந்து எவ்வாறு மாணவர்களும், பொதுமக்களும், தப்பித்துக் கொள்வது என்ற விழிப்புணர்வு முன்னேற்பாட்டு நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை மன்னார், தாழ்வுபாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மன்னார் பிரதேச செயலகம், மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் பல திணைக்களங்கள் ஒருங்கிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. முப்படையினர், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் இணைந்து இந்த சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த ஒத்திகை பற்றிய தகவல்களை அறிந்திராத பொதுமக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-213)

# விசுவமடுப் பகுதியில் தொடர் திருட்டுகள்!

## பொலிஸார் அசமந்தம்; மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, நவ. 14

**முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் அண்மைக்காலமாகத் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்றும், இது தொடர்பில் பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

விசுவமடுப் பகுதியில் அண்மைக்காலமாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. திருடர்களின் தொல்லையால் இந்தப் பகுதியில் வாழமுடியாத நிலை ஏற்படுத்தப்படுகின்றது. குறிப்பாகஎரிவாயுசிலிண்டர், துவிச்சக்கரவண்டிஉள்ளிட்ட பொருள்கள் பல்வேறு வீடுகளில் இருந்தும் தொடர்ச்சியாகத் திருடப்படுகின்றது. இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திருடர்களின் அதீத நடமாட்டத்தால் நாம் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையில் உள்ளோம். எனவே பொலிஸார் இது தொடர்பில் உரிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் - என்றனர். (ம-113)

# போதைப்பாக்குடன் கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், நவ. 14

போதைப்பாக்குடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய, சங்கானை தேவாலய வீதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த இளைஞரை மறித்துச் சோதனையிட்டபோதே அவரிடமிருந்து போதைப்பாக்கு கைப்பற்றப்பட்டது. அவரைக் கைது செய்த பொலிஸார், சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ம-125)



# கொமர்ஷல் வங்கியால் வவு.பல்கலையில் மரநடுகை

வவுனியா, நவ. 14

கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில், 'மரங்கள் நிறைந்த தேசம்' எனும் தொனிப்பொருளில் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை முழுவதும் ஒரு இலட்சம் மரங்களை நடும், தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டமாக இந்த மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன், கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சிவஞானம், வவுனியாப் பல்கலைக்கழகப் பதிவாளர் ராஜவிசாகன் மற்றும் வவுனியா நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் கஜமுகதாஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-18)

# ஹெரோய்னுக்கு அடிமையானவர் புனர்வாழ்வுக்கு!

யாழ்ப்பாணம், நவ. 14

ஹெரோய்ன் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தின் ஊடாக புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஹெரோய்னுக்கு அடிமையானவர் என்று மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்றதையடுத்து அவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். (ம-125)

# ஜப்பானியத் தூதுவருடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

கொழும்பு, நவ. 14

ஜப்பானியத் தூதுவர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. சந்திப்பில் வடக்கு மாகாணம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. ஜப்பான் அரசாங்கம், வடக்கு வளர்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்கும் என்று ஜப்பானியத் தூதுவர் வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார். (எ-27-100)



## கிராமஅலுவலக முகாமை;

# நாடளாவிய ரீதியில் நெல்லியடி பத்தாமிடம்

யாழ்ப்பாணம், நவ. 14

பொதுநிர்வாக அமைச்சால் 2020/2021 வருடத்துக்கான கிராமஅலுவலர் அலுவலகங்களிடையே நடத்தப்பட்ட அலுவலக முகாமைத்துவப் போட்டியில் கரவெட்டிப் பிரதேசசெயலகத்தின் ஜே/376 நெல்லியடி பிரிவு இலங்கை ரீதியில் பத்தாமிடமும் மாகாண ரீதியில் இரண்டாமிடமும் பெற்றுள்ளது.

பொது நிர்வாக அமைச்சால் நியமிக்கப்பட்ட நிர்வாக சேவை அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் நாட்டின் 25 மாவட்டங்களிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 14 ஆயிரத்து 22 கிராமஅலுவலர் பிரிவுகளுக்கும் நேரடியாகச் சென்று மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வில் சிறந்த புள்ளிகளின் அடிப்படையில் தேசிய ரீதியில் 12 கிராமஅலுவலர்களின் விவரங்களை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதில் கரவெட்டிப் பிரதேசசெயலகத்தின் ஜே/376 நெல்லியடி கிராமஅலுவலர் யாழ்.மாவட்டத்தில் முதலாமிடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தையும், தேசியத்தில் 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளது. (ம-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளின் கடன்களே வங்குரோத்துக்குக் காரணம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 14**

**கடன் வழங்கி எம்மை நசுக்கி இந்து சமுத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக்கொள்ளவே மேற்கத்தேய நாடுகள் முயற்சிக்கின்றன. இந்தக் கடன்கள் மூலம் அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதும் அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை. இதுவும் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணம் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- சர்வதேச கொள்கைகளை உருவாக்கும்போது அதிக கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச அரங்கில் எமது கோட்பாடுகளுக்கு அமைய ஆற்றல் மிக்க அடையாளத்தை உருவாக்கவேண்டும். எம்மை நசுக்கி, இல்லாமல் செய்து இந்து சமுத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக் கொள்ளவே மேற்கத்தைய நாடுகள் முயற்சிக்கின்றன. தற்போது அந்த நாடுகள் பயன்படுத்தும் மூலோபாயங்கள் முன்னரை விட வேறுபட்டவை. இன்று அவற்றை ஆக்கிரமிப்பு என கூறுவது இல்லை. அதைக் கடன் வழங்குதல் என குறிப்பிடுகின்றனர். இரு நிபந்தனைகளுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் இலகுவானதாக இருந்தாலும், அவற்றால் நாம் பொருளாதார ரீதியாக நசுக்கப்படுகின்றோம். அதற்கு மற்றுமொரு பெயரே அபிவிருத்திக்கான முதலீடு. அபிவிருத்திக்கான முதலீடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று மிகவும் தாராளமானவர்கள். இந்தத் தாராளமானவர்கள் அபிவிருத்திக்கு அதிக கடன்களை வழங்கி நாட்டை மேம்படுத்த உதவுகின்றனர். மற்றைய பிரிவினர் எமக்குத் தேவையான நிதியை கோரிய உடனேயே வழங்குபவர்கள். இந்தக் கடனுக்கு அதிக வட்டி வீதம் அறவிடப்படுகிறது. இதுவே பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணமாகும் - என்றார். (எ-இ)





குருநகர் புனித யாகப்பர் ஆலயம் 1993ஆம் ஆண்டு குண்டு வீசப்பட்டு அழிக்கப்பட்டதன் 30ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று நினைவு கூரப்பட்டது. பங்குத் தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட காலைத் திருப்பலியைத் தொடர்ந்து இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டன. (ம-20)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக குழப்பத்தில் ஈடுபடவில்லை

## ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் நோக்கிலேயே தற்போது அரசியல் சமரில் ஈடுபட்டுவருவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நிராகரித்துள்ளார்.

'அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தைத் தானே தற்போது முன்னெடுத்து வருகின்றீர்கள்?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கூறியவை வருமாறு,

'ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்களே முடிவெடுப்பார்கள். எனக்கான பொறுப்பை சரிவர நிறைவேற்றவே நான் முயற்சித்து வருகின்றேன். இது தொடர்பில் வெவ்வேறு கோணத்தில் கதைகள் வெளிவரலாம். ஓர் அமைச்சராக எனது பொறுப்பை நிறைவேற்ற முடியாவிட்டால் எதற்காக அமைச்சுப் பதவியை வகிக்க வேண்டும்? தவறைத் தவறெனச்சுட்டிக்காட்டுவதற்கு முதுகெலும்பு இருக்கவேண்டும். எனது அரசியல் பயணத்தில் அந்த முதுகெலும்பு இருக்கின்றது' - என்றார். (ம-44)

# ரொஷான் ரணசிங்க சி.ஐ.டி.யில் முறைப்பாடு

கொழும்பு, நவ. 14

இலங்கைக் கிரிக்கெட் நெருக்கடி தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். கணக்கு தணிக்கை அறிக்கையில் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பாகவும், கிரிக்கெட்சபையின் தலைவர் ஷம்மி சில்வா தொடர்பிலும், தனக்கு எதிரான கொலை மிரட்டல்கள் தொடர்பாகவுமே குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அமைச்சர் முறைப்பாடு செய்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

# புதினம் தெரியுமோ?

**ஸ்**கொலஷிப்பில பாஸ் பண்ணினா பள்ளிக்கூடத்துக்கு லாபம், ஸ்கூல் மாறினாலோ பரிசளிப்பு விழாவில கோபம்'எண்டமாதிரி நிலைமையளை அடிக்கடி இஞ்ச பாக்கக்கூடியதா இருக்குது. அப்பிடி ஒரு சம்பவம் வடமராட்சியில உள்ள கல்லூரி ஒண்டில கிட்டடியில நடந்திருக்கு. அந்தப் பள்ளிக்கூடத்தில் படிச்சு ஸ்கொலஷிப் எக்ஸாமில கூடுதலா மார்க்ஸ் எடுத்த பிள்ளைக்கு அதைவிட வேற ஒரு பள்ளிக்கூடத்தில படிக்கவேணும் எண்டு ஆசை. ஏனெண்டால் இந்தப் பள்ளிக்கூடத்தில சில வசதிக்குறைபாடுகள், சில பாடங்களுக்கு ரீச்சர்மார் இல்லை எண்ட பிரச்சினையால வடமராட்சியில பேமஸான இன்னொரு பள்ளிக்கூடத்தில தரம் ஆறு படிக்கப் போறன் எண்டு அந்தப் பிள்ளையும், பெற்றோரும் சொல்லியிருக்கினம்.

இது அந்தப் பள்ளிக்கூடப் பிரின்சிப்பலைக் கடுப்பாக்கிப் போட்டுது.'நாங்கள் அத்திபாரம் போட்டுவிட அதைமறந்திட்டு போறது சரியில்லை' எண்டு அவர் நினைச்சதும் பிழையில்லை. ஆனால் ஒரு பிள்ளை எங்க படிக்கோணும் எண்டதை அந்தப் பிள்ளைதான் தீர்மானிக்கோணும். வில்லங்கத்துக்கு பிடிச்சு வைச்சு பிள்ளையை விலாங்கு மீன் ஆக்கக்கூடாது. ஒருமாதிரி அந்தப் பிள்ளை புதுப்பள்ளிக்கூடத்துக்கும் போட்டார்.

இப்ப அந்தப் பிள்ளை படிச்ச பழைய பள்ளிக்கூடத்தில பரிசளிப்பு விழா. ஸ்கொலஷிப்பில இந்தப் பிள்ளைதான் பள்ளிக்கூடத்திலேயே கூடுதல் மார்க்ஸ் எடுத்ததால, அவருக்கு ஒரு பெரிய தொகை பரிசா குடுக்க இருந்தவை. ஆனால் அப்பிடி ஒரு பரிசு இருக்கெண்டோ, பரிசளிப்பு விழாவுக்கு வரச்சொல்லியோ பள்ளிக்கூடக்காரர் மூச்சுக்கூட விடேலையாம். ஒவ்வொரு வருசமும் ஸ்கொலஷிப்பில பள்ளிகூடத்தில முதலாவதா வாற பிள்ளைக்கு பரிசு குடுக்கிறவை எண்டது வழக்கம் எண்டது அந்தப் பிள்ளையின்ர பெற்றோருக்குத் தெரியும். அதால அவை பள்ளிக்கூடக்காரருக்கு போன் பண்ணி, 'எங்கட பிள்ளைக்கு பரிசு இருக்கா? நாங்கள் வரோணுமோ?' எண்டு கேட்டிருக்கினம். ஆனால் 'அப்பிடி எங்களுக்கு தெரியேலை, பரிசு இருந்தால் அறிவிப்பினம்'எண்டு அவைக்கு சொல்லுப்பட்டிருக்கு. கடைசி மட்டும் அப்பிடி ஒரு அறிவிப்பு அவைக்கு வரேவேயில்லை எண்டதால, அந்தப் பிள்ளையும் பழைய பள்ளிக்கூடத்துப் பரிசளிப்பு விழாவுக்கு போகேலை. ஆனால் பகிடி என்னெண்டால், அந்தப் பரிசளிப்பு விழாவில பதினையாயிரம் பெறுமதியான பரிசு இருந்ததாம். பரிசளிப்புவிழாப் புத்தகத்தில பிள்ளையின்ர பேரும், சாதனையும் போட்டிருந்தவையாம். ஆனால் பரிசளிப்பு விழாவுக்கு கூப்பிடத்தான் பள்ளிக்கூடக்காரருக்கு மனமில்லாமல் போட்டுது போல. இப்பிடி பள்ளிக்கூடம் மாறுற பிள்ளையளைப் பழிவாங்கிறதுதான் அந்தப் பள்ளிக்கூடக்காரரின்ர 'மிஷனோ?'

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய அணியினுடைய ஆட்டத்தில் முழுத்திருப்தி

## ரோகித் சர்மா தெரிவிப்பு!

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் செயற்பாட்டில் ஓர் அணித்தலைவராக முழுத்திருப்தியுடன் உள்ளேன். எங்கள் வீரர்கள் அனைவரும் தனிப்பட்ட பொறுப்புகளை உணர்ந்து விளையாடுகின்றனர் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நேரத்தில் ஓர் ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும் என்பதில் தீர்க்கமாக இருந்தோம். ஒட்டுமொத்தமாக அனைத்து ஆட்டங்களையும் கருத்தில் எடுக்கவில்லை. அது எங்களின் உளவியலைப் பாதிக்கும் என்பதை அறிவோம். ஒன்பது ஆட்டங்களிலும் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளமை மகிழ்ச்சியே.

ஓய்வறைச் சூழலை கலகலப்பாக வைத்திருக்க போட்டியின் முடிவுகள் முக்கியம். நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கும், எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நமது கையில் என்ன உள்ளதோ அதில் மட்டுமே கவனம் செலுத்தினோம். தொடரின் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை, மைதானத்தில் போட்டியை மிகவும் வேடிக்கையாகவும், உற்சாகமாகவும் விளையாட விரும்பினோம். அதுவே, தற்போது எங்கள் ஆட்டத்தில் பிரதிபலிக்கிறது. இதுமாதிரியான செயல்களை செய்ய முயற்சிக்கும்போது, வெளியில் இருக்கும் சூழல்களை நன்றாக வைத்திருக்கவேண்டும். அப்படி செய்யும்பட்சத்தில் வீரர்கள் எந்த சுமையும் இல்லாமல் விளையாடுவார்கள். அதையே நாங்களும் செய்தோம் - என்றார்.

(ம)




**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..............................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசு கூப்பன் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பமுடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.



# இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

## பாக். கிரிக்கெட் சபையை சாடுகின்றார் மலிக்

வீரர்களை எப்படி உருவாக்கவேண்டும் என்பதை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் இருந்து கற்றுக்கொள்ளவேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மலிக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த உலகக் கிண்ணத் தொடரில், இந்தியா அனைத்து அம்சங்களிலும் சிறப்பாக உள்ளது. நான் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்புத் தொடர்பில் மட்டும் பேசவில்லை. தொடரில் இந்திய வீரர்களும் காயங்கள் அடைந்தனர். ஆனால், அதற்கும் மாற்றுத் திட்டத்தையும் இந்தியக் கிரிக்கெட் சபை வைத்திருந்தது. இந்தியாவிடம் இருந்து பாகிஸ்தான் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் (இந்தியா) ஒவ்வொரு துறையிலும் பெரிய வீரர்களை உருவாக்கி வைத்துள்ளனர் - என்றார்.

(ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்த்துவிடவும்.

**மீனம்:** சொல்லிலும் செயலிலும் பொறுமை தேவைப்படும் நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

## தினம் ஒரு பரிசு — நாள் 39 இன் வெற்றியாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.ஜங்கரனி | - | ஓட்டுமடம் | பொ.சிவசுப்பிரமணியம் | - | நெடியகாடு |
| பா.ஆகித்யன் | - | பண்டத்தரிப்பு | வா.ஜெயரட்ணம் | - | ஆனைக்கோட்டை |
| சி.தியாகேஸ்வரி | - | கோப்பாய் | சி.சித்திராங்கன் | - | வல்வெட்டித்துறை |
| ப.தனஞ்சன் | - | ஆறுகால்மடம் | ஜி.ஜீவிதா | - | காரைநகர் |
| வ.விக்னேஷ் | - | அராலி தெற்கு | ஆ.ஆருரன் | - | கிராமக்கோடு |
| ஜெ.காந்தறூபன் | - | குருநகர் | எஸ்.திவாகரன் | - | கொய்யாத்தோட்டம் |
| இ.எயுஜீன் மசனட் | - | புதுமடம் | வை.திரேசன் | - | வவுனியா |
| உ.அபிசேகன் | - | தாவடி | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 'பட்ஜெட்' பம்மாத்து!

**2024** ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அதிகரிப்பு, கொழும்பு அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிப்போருக்கு வரிவிலக்கு, மூத்தோருக்காகவும், நோயாளிகளுக்காகவும் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு சில ஆயிரங்களால் அதிகரிப்பு என்று விரல் விட்டு எண்ணக்கூடிய நலத்திட்டங்களுடன் பூசிமெழுகி முன்வைக்கப்பட்டிருக்கின்றது இந்தப் பாதீடு.

பொருளாதார நெருக்குவாரத்தில் வீழ்ந்திருந்த இலங்கை, அதிலிருந்து மீண்டு வந்தமைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பொருளாதார உதவிகள் பிரதானமான காரணம். ஆனால், அந்த உதவிகளைத் தொடர்ந்து இலங்கைக்கு வழங்கமுடியாத 'கொள்ளை முரண்' நிலையில் நாணய நிதியம் தற்போதுள்ளது. இலங்கை தன் வரி வருமானத்தைப் பலப்படுத்தவில்லை. நிலையான – பலமான வரிக் கொள்கை இல்லாததால் வழங்கும் கடன்களைத் திரும்பிச் செலுத்தும் இயலுமையில் இலங்கை இல்லை என்பதுதான் இரண்டாம் கட்டக் கடன் விடுவிப்புத் தாமதத்துக்கு சர்வதேச நாணய நிதியம் சொல்லும் காரணமாக அமைந்திருக்கின்றது. ஆதலால், இந்தப் பாதீட்டில் புதியபுதிய வரிவிதிப்புகளை ரணில் விக்கிரமசிங்க கொண்டுவருவார் என்பது எதிர்பார்த்ததே. அதற்கேற்பவே பாதீட்டை அவர் முன்வைத்துள்ளார். 'அரசாங்கம் தன் வருவாயைப் பலப்படுத்தவேண்டும், நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் வரி விலக்குகள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் பல்வேறு முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன' என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் மீண்டும் மீண்டும் தெரிவித்ததன்மூலம் அவர் இதைத்தான் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கட்டியம் செய்துள்ளார்.

ஒரு நாடு நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுகொள்ளவேண்டுமாயின், அது தன்னிறைவுப் பொருளாதாரத்தில் வளம்பெறவேண்டும். ஆனால், அதற்கேற்ற காத்திரமான எந்தவொரு ஒதுக்கீடும் இந்த வரவு – செலவுத்திட்டத்தில் இல்லை. உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டமைப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் சிந்தனை என்ன? என்ற குறைந்தபட்சப் புரிதல்கூட 2024ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் தெளிவுபடுத்தப்படவில்லை. மாறாக நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைப் பலப்படுத்தவேண்டும், தனியார் துறையின் உதவியுடன் உட்கட்டுமானங்களை அமைக்கவேண்டும் என ஜனாதிபதி செயலகத்திலிருந்து, திரும்பத்திரும்ப அரைத்துக் கொண்டிருக்கும் மாவை, ஒரு 'மாற்றத்துக்காக' நாடாளுமன்றத்துக்கு வந்து அரைத்துவிட்டுச் சென்றிருக்கின்றார் ரணில்.

பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமை, வடக்கு – கிழக்கு மக்களுக்கு 2024ஆம் ஆண்டில் குடிதண்ணீர் என்ற வாக்குறுதிகளையும் ரணில் வழங்கியிருக்கின்றார். 'வேண்டாதவன் தொட்டதெல்லாம் தீண்டாதது' என்பது போல், ரணிலின் அனைத்துத் திட்டங்களையும் விமர்சிப்பதற்கல்ல. ஆனால், இந்தத் திட்டங்கள் இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத்திட்டங்களில் இடம்பெறவில்லையா? என்ற சுயபரிசீலனையை 'நிதியமைச்சரான' ரணில், தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமை இதற்கு முன்னர் வெவ்வேறு நிதியமைச்சர்களால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் இடம்பெற்ற விடயம்தான். அது செயல்வடிவம் பெற்றிருந்தால், ரணிலின் பட்ஜெட்டில் அந்தப் பேச்சுக்கே இடமிருந்திருக்காது. அதேபோன்றே ரணிலும் பெருந்தோட்ட மக்களுக்குக் காணிகளை வழங்குவார், வடக்கு – கிழக்கின் தண்ணீர் மற்றும் மீள்குடியேற்றப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்று இம்முறை முன்வைத்த பாதீட்டுத் திட்டங்களையே அடுத்தடுத்த வருடங்களிலும் – அவர் மீண்டும் ஜனாதிபதியானால் – முன்வைக்கவும் கூடும். பரீட்சையில் மாணவர்கள் 'கொப்பியடிப்பதைப்' போல பாதீட்டில் அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் உறுதிமொழிகளைக் கொப்பியடிக்கிறது. அவ்வளவுதான்.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

- அமிற் றே (இந்திய ஆன்மீகக் குரு)




அரசுக்குச் சொந்தமான

# ரூபா 1,000 கோடி சொத்து தனியாரால் ஆக்கிரமிப்பு

கொழும்பு, நவ. 14

**பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் பல வருடங்களாக பல்வேறு வெளியாள்களால் வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.**

11 தோட்டங்கள், பல கட்டடங்கள் மற்றும் சொத்துகளை நிர்வகிப்பதற்கான சட்டப் பொறுப்பை பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் கொண்டுள்ளது. ஆயினும் இந்தக் காணி மற்றும் கட்டடங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கணக்கிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நுகேகொடை பிரதேசத்தில் பிரதான பாடசாலை ஒன்றுக்கு அருகிலுள்ள குறிப்பிட்ட வீடொன்று பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர், அந்தத் திணைக்களத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் சொத்து வருமானத்தைச் செலுத்தாமல் 17 வருடங்களாக அந்த வீட்டைப் பயன்படுத்தி வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளின் தூதரகத்துக்கு ஒதுக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கி வருகின்ற போதும் அதன் வருமானம் மூன்றாம் தரப்பினரால் பெறப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

கொழும்பு நகர மையம் மற்றும் வெள்ளவத்தையில் உள்ள சுமார் நூறு ஏக்கர் காணி சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தப்பட்டமையால் பெரும் சட்டச் சிக்கல்கள் எழுந்துள்ளன என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துகள் பல வருடகாலமாக வெளியாள்களால் சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய தெரிவித்துள்ளார். பொதுநம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துகள் தொடர்பில் ஆராய்ந்து கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# ரணில் - ராஜபக்ச அரசை ஒழிக்க அணிதிரளுங்கள்

அழைக்கின்றது ஜே.வி.பி.

ரணில் – ராஜபக்ச அரசு இனியும் ஆட்சியில் தொடர மக்கள் அனுமதிக்கக்கூடாது. இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் தேசிய மக்கள் சக்தியின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும் இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க இன்று செய்வதறியாது திக்குமுக்காடுகின்றார். அரசியலிலும், விளையாட்டிலும் ஊழல் மோசடியாளர்களைப் பாதுகாக்க முற்படும் ரணில், தானும் ஒரு ஊழல்மோசடியாளன் என்பதை மறந்துவிட்டார். ரணில் ராஜபக்ச அரசை விரட்டியடிக்க அனைத்து மக்களும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும்-என்றார். (எ-இ)

**நாளை** 15.11.2023 புதன்கிழமை ஐப்பசி 29

சுபநேரம் : 04.37 - 06.07

ராகுகாலம் : 12.07 - 01.37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருங்குளவிகள் கொட்டி இருவருக்கு காயம்

காற்றால் பனைமரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குள விகள் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த 23 மற்றும் 34 வயதுடைய இரு இளை ஞர்களை மோசமாகக் கொட்டின. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில், கெற்பேலியில் இடம்பெற்றது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர். (ஓ-9)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 07 . 1932

மறைவு 05 . 11 . 2021

### அமரர் கந்தையா பராசக்தி

திதி: பிரதமை (14.11.2023)


ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறவில்லை
எம் துயரம் அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

171/3, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(cs.26927) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 25.10.2022 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா கந்தசாமி

(ரிப் ரொப் உணவக உரிமையாளர்)

தோற்றம் 12.06.1958

மறைவு 25.10.2022

எங்கள் அன்புத் தெய்வம் அப்பா !
ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களுடன் கூடி வாழ்ந்த காலங்கள்
என்றும் பசுமையானவை. உங்கள்
வழிகாட்டல்கள் எங்களை வழிநடத்தும்.

அவர்களின் முதலாம் ஆண்டை நினைவு கூருவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தின்றோம்.

K.K.S றோட்
மாவிட்டபுரம்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சுபகிருது வருடம் 19ஆம் நாள்
(05.11.2023) ஞாயிற்றுக்கிழமை அட்டமித்
திதியில் சிவபதமடைந்த எமது மாமி

### திருமதி சுசிலாதேவி வீரமணி ஐயர்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள்
எமது இல்லத்தில் பின்வரும்
தினங்களில் நடைபெறும்.


தசாகம் (14.11.2023) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில்.
ஏகோதிஷ்டம் (15.11.2023) புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் மாசிகம்
சபிண்டீகரணம் (16.11.2023) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில்.
கிருஹயக்ஞம் (17.11.2023) (மதிய போசனம்) வெள்ளிக்கிழமை

மேற்படி கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

171/3,
மனோன்மணி அம்மன் கோவில்,
நல்லூர்.

குடும்பத்தினர்
0772269365

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 31 • 03 • 1942

மறைவு 11 • 11 • 2023

முன்னாள் யாழ் மருத்துவ பீட பீடாதிபதியும் முன்னாள் வட இலங்கை
மருத்துவக் கல்லூரியின் வருகை தரு உடற்றொழிலியர் பேராசிரியருமாகிய

### பேராசிரியர் S.V. பரமேஸ்வரன்

அவர்கள் (11.11.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகவும் துயருறுகின்றோம். அன்னார் அந்நாளில் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் எமக்காக எடுத்த துணிச்சலான முடிவினால் தான் எம்மில் பலர் இன்று வைத்தியர்களாகப் பல்வேறு பிரிவுகளிலும் கடமை புரிந்துகொண்டிருக்கின்றார்கள். அவர் மருத்துவபீட பீடாதிபதியாகக் கடமையாற்றிய வேளை யாழ் மருத்துவபீடத்துடன் வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்களை இணைப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முக்கிய ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றவேளை அன்னார் பேருந்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விஜயம் செய்து தனது ஒப்புதலை எழுத்து மூலம் வழங்கியிருந்தார். அவரின் இச்செயலால் தான் எம்மில் பலர் இன்று வைத்தியர்களாக கடமை யாற்றுகின்றார்கள். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் உறவுகளுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைதாழ் பணிந்து நிற்கின்றோம்.

வடஇலங்கை மருத்துவக்கல்லூரியில் கல்வி கற்ற வைத்தியர்கள்

(CS 26928) (Ak.1)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம் . 03 . 01 . 1961



மறைவு . 11 . 11 . 2023

### நிரஞ்சன் பிறேமாவதி

கரம்பன் காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் கொழும்பு-15ஐ வதிவிடமாகவும், பூநாரிமரத்தடி கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நிரஞ்சன் பிறேமாவதி அவர்கள் கடந்த (11.11.2023) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், அமரர் கந்தையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் நிரஞ்சனின் பாசமிகு மனைவியும், சஜித்தா, சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு அம்மாவும், ஜெனார்த்தனனின் அன்பு மாமியாரும், ஜான்வியின் அன்பு அம்மம்மாவும், நிர்மலா, யோகரத்தினம், அரசரத்தினம், இராசரத்தினம், தேவரத்தினம், விஜயரத்தினம் ஆகியோரின் சகோதரியும், அமரர் நடராசா, அமரர் செல்வராசா, இராஜேஸ்வரி, சகுந்தலாதேவி, ஜெயரூபன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.11.2023 வியாழக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கரம்பன் கிழக்கு கோட்டைவாசல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
மைத்துனர்: ஏ.சிவபாலன் (077 8489 079)
மகன் : நி.சதீஸ்குமார் (077 580 1345)

(CS 26934) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து இரு விபத்துக்கள்: நால்வருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், நவ. 14

ஊரெழுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை அடுத்தடுத்து இடம்பெற்ற இரு விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- உரும்பிராயிலிருந்து வயாவிளான் நோக்கி மோட்டார் சைக்கிளில் முதியவரொருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது மாலை 6.30 மணியளவில் பலாலி வீதியில், ஊரெழு அம்மன் கோவில் சந்தியில் அதே பக்கமாகத் துவிச்சக்கரவண்டியில் பயணித்து கவனவீனமாகத் துவிச்சரவண்டியைத் திருப்பிய குடும்பஸ்தரின் துவிச்சக்கரவண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தருக்கும் காயமேற்பட்டபோதிலும் துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு உடனடியாக அங்கிருந்து நழுவியுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த 60 வயதான முதியவர் சிறு காயங்களுக் குள்ளான நிலையில் தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

அதேநாளில் வேலை முடித்து அதிகரித்த வேகத்தில் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மாலை 7 மணியளவில் பலாலி வீதியில், ஊரெழு மடத்துவாசல் வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் துவிச்சக்கரவண்டியில் அதே பக்கமாகப் பயணித்த முதியவரை மோட்டார் சைக்கிளால் பின்னால் மோதியுள்ளனர். சம்பவத்தில் குறித்த முதியவர் சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். மோட்டார் சைக்கிளில் பயணித்த ஊரெழு வடக்குப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஒ-66)

# தாமரைக் கோபுரத்தில் சுழலும் உணவகம்

தெற்காசியாவின் முதலாவது சுழலும் உணவகம் கொழும்பில் உள்ள தாமரைக் கோபுரத்தின் 26 ஆவது மாடியில் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுர நிர்வாக நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கமைய, தாமரைக் கோபுரத்தின் மூன்று தளங்களை நிர்வகிப்பதற்கான அனுமதியை தனியார் நிறுவனமொன்று பெற்றுள்ளது.

இந்த நிறுவனம் தாமரைக் கோபுரத்தின் 26 ஆவது மாடியில் இரண்டு விருந்துபசார அரங்குகளை நிர்வகிக்கவுள்ளது. 25 ஆவது மாடியை வேறு சில பொழுது போக்கு அம்சங்களுக்காக அந்த நிறுவனம் பயன்படுத்தவுள்ளது.

சுழலும் உணவகத்தில் ஒரே தடவையில் 225 விருந்தினர்கள் தங்கமுடியும் எனவும் சர்வதேச உணவுகளின் உண்மையான சுவைகளை வழங்குவதற்கு, வெளிநாட்டு சமையல் நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ள னர் என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சுழலும் உணவகம் தினமும் நண்பகல் 12 மணி முதல் நள்ளிரவு வரை திறந்திருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## வடமராட்சி வலய மாணவர் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஒ-66)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாசத்திற்குரிய நண்பன் சாவகச்சேரி
அபிசா ரெக்ஸ்ரெயில் உரிமையாளர்
**இரத்தினம் கோகுலன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**இரத்தினம் அரியேஸ்வரி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**S. மணிவர்ணன் குடும்பம்**
சாவகச்சேரி, நல்லூர்.

**வாணிரெக்ஸ்**
81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். 2024 ஆம் ஆண்டிற்கான 1வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2024.01.01ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - 14.11.2023 – 27.11.2023 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - 28.11.2023 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - 28.11.2023 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ இ. | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,983,100.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 477,300.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 173,500.00 | |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 5 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 52,500.00 | 250.00 |
| 6 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 263,100.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 210,000.00 | 250.00 |
| 8 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,850.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 28,942,900.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 2,577,300.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,700.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 830,600.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 389,100.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| | | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 258,650.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 656,250.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2023.12.12ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2023.12.12 ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

14.11.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 01 . 1954



இறப்பு
12 . 11 . 2023

### மெஜாய் லோகேந்திரன் வின்சன்ட்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரத்தை வதிவிடமாகக் கொண்ட மெஜாய் லோகேந்திரன் வின்சன்ட் அவர்கள் கடந்த (12.11.2023) ஞாயிறு காலமாகிவிட்டார்.

பிறதர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் இவர் காலஞ்சென்ற வரப்பிரகாசம் செபஸ்தியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை மேரி ஆன் நேசராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி திரேசா (பபி) யின் அன்புக் கணவரும், யூட், மேரி டிலக்ஷி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி மாகிறெட் (குணமணி), அருட்தந்தை பிரான்சிஸ் டானியேல் (அ.ம.தி), அருட்சகோதரி மேரி சிப்றியன் (தி.கு.கன்னியர்மடம், இளவாலை), காலஞ்சென்ற மேரி மெக்டலின் ஜோசப், அருள் எட்மன், யோகமணி தங்கநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), பத்மராணி லியோ (ஜெயமணி), மேரி நவமலர் புவனேந்திரன் (நவமணி), லெஸ்லி ஜோண்சன், மேரி மாசில்லா நாகேந்திரராஜா, அனற்ரன் இருதயராஜ் (ராஜீ) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான றெஜி, ஜெராட் மற்றும் கமிலஸ், ஆனந்தி, சாந்தினி அன்ரன், லோஜினி லைமன், தர்ஷினி பயஸ், நரேஸ் குமார், சுரேஸ்குமார், ரமேஷ், கிங்ஸ்லி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் மாலை 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ஜீட் (மகன்):- 070 4164 593**
**பபி (மனைவி):-077 5758 229**

(CS 26933) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 12 - 1944



மறைவு
11 - 11 - 2023

### இரத்தினம் அன்னம்மா

சாவகச்சேரி வடக்கு மருதடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அன்னம்மா அவர்கள் கடந்த (11-11-2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா இரத்தினம் (இ.போ.ச சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கந்தசாமி மற்றும் சுந்தரம்மா, சகுந்தலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், குணரதி (வவுனியா), திருமகள் (சுவிஸ்), சுதர்ஷினி (ஜேர்மனி), அருள்செல்வம் (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேஷ் (வவுனியா), ரமணன் (சுவிஸ்), உதயேந்திரன் (ஜேர்மனி), பானுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், பபினயா, ரிஷ்வின்யா, அபிலினியா, சௌமியா, சரிகா, சினேஹா, அபினேஷ், அபிஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மருதடி,**
**சாவகச்சேரி வடக்கு.**

தகவல் :
**குடும்பத்தினர்**

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் - இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களம்)
யாழ். காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் வசிப்பிடமாவும் கொண்டிருந்த **சரோஜினிதேவி சிவஸ்கந்தா** அவர்களின்
**12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**பன்னிரெண்டு ஆண்டுகள் பறந்தனவே**

அந்தமில்லா அன்புதந்த எந்தன் தாயே!
உந்தன் அடிபணிந்தோம் வந்தெமைப்பாரீர்
சொந்தமாய் இருந்த எங்கள் பந்தமே
கந்தனை வணங்கும் நாளில்
விந்தைகள் செய்யும் வேந்தனும் விடவில்லை
வஞ்சனை செய்து பறித்துமே சென்றுவிட்டான்
நிந்தனை செய்யும் உலகில் இங்கே
எந்தையர் எல்லாம் பந்தமாய் இருங்கள் என்று
முந்த நாள் கனவில்வந்து முந்நூறு தரம் சொல்லி
வந்தநாள் அத்தனையும் மன வேதனையில் கிடக்கிறது
சிந்தனை செய்கையிலே சிரசெல்லாம் வலிக்கிறது
உத்தனைக் காண இனியொரு பிறவி வாராதோ?
வந்தெம்மை ஆட்கொள்ளும் இப்பிறவிதனிலே.

மஞ்சப் பேழையிலே கொண்டு வெந்தணலில் தள்ள
கெஞ்சிநாம் கேட்டும் கஞ்சக்கடவுள்
கொஞ்சமும் இரங்கவில்லை கொண்டுமே சென்றுவிட்டான்
அஞ்சா நெஞ்சம் கொண்ட எங்கள் அம்மாவை
துஞ்சா விழிகொண்டு எமைப்பார்த்த மங்கா விளக்கை
மிஞ்ச யாருண்டு தஞ்சமென்றிருந்தோம் தவிக்கின்றோம்
பஞ்சமா வரும் நீரிருந்தால் ஊஞ்சல் ஆடுகையிலே
இஞ்சவா என்று சொல்லி ஊட்டிவிடும்
கஞ்சிக்கு வருமா ஈடு இணை இவ்வுலகில்
பஞ்சு உள்ளம் கொண்ட பரிமளம் பெற்றமகளை
வஞ்சமாய் வந்து வஞ்சகக் கடவுள் பிரித்துவிட்டான்
மஞ்சத்தில் கிடத்தாலும் நெஞ்சமோ பொறுக்குதில்லை
காய்ஞ்சு போனது கண்ணீர் மட்டுமல்ல
சாய்ஞ்சுகொள்ளும் உங்கள் தோள்களும் தான்
ஓய்ந்து போகாமல் எமக்காய் உழைத்த
தேய்ஞ்சு போகாத சந்திரனை தேடுகிறோம் வந்துவிடும்.



**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தோற்றம்
14.09.1941

மறைவு
28.10.2011

திதி: 14.11.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்டாடும் மக்களுக்கு பாதீட்டில் எதுவுமில்லை

## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு உள்ளிட்டவையால் திண்டாடும் மக்களுக்கு பாதீட்டில் எந்தவொரு தீர்வும் இல்லை என்று சட்டத்துறை பேராசிரியரான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதீடு வருவதற்கு முன்னரே வற்வரி அதிகரித்துவிட்டது. இதனால் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும். ஏற்கனவே வாழ்க்கைச்சுமை அதிகரிப்பால் மக்கள் தள்ளாடுகின்றனர். வற்வரி அதிகரிப்பு அவர்கள் மீது மேலும் சுமையைத் திணிக்கும்.

இந்நிலையில்தான் 6 மாதங்களுக்குப் பிறகு கிடைக்கவுள்ள கொடுப்பனவு அதிகரிப்பு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒட்டுமொத்தத்தில் மக்கள் நலன் பற்றி சிந்திக்காத பாதீடே இது- என்றார். (அ-ஓ-44)

## துண்டுவிழும்...

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்வைக்கப்பட்டது. இதில் வரி வருமானம், அன்பளிப்பு உட்பட 2024 ஆம் ஆண்டுக்கான அரச வருமானமாக 4 ஆயிரத்து 127 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், மீண்டெழும் செலவு, மூலதனச்செலவு உட்பட மொத்தச் செலவாக 6 ஆயிரத்து 919 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறையாக (துண்டுவிழும் தொகை) 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபாவாகக் கணிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-44)

## நல்லூர்க்...

வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. கந்தசஷ்டி விரத உற்சவம் தொடர்ந்து ஆறு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக நல்லூர் முருகனில் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு சிவலிங்க பூசையும், மு.ப. 10 மணிக்கு காலைச் சந்திப் பூசையும், முற்பகல் 10.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறவுள்ள அதேவேளை தினமும் பி.ப. 3.45 மணிக்கு சாயரட்சைப் பூசையும், மாலை 4 மணிக்கு 2 ஆம் காலச் சந்திப் பூசையும், மாலை 4.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை கந்தசஷ்டி விரத காலப் பகுதியின் முக்கியமான உற்சவமான சூரசம்ஹார உற்சவமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (அ-ஓ-66)

## பலாலி...

சென்னையிலிருந்து 28 பயணிகளுடன், நேற்றுத் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குப் புறப்பட்டு வந்த ஏயார் அலையன்ஸ் பயணிகள் விமானமே அங்கு நிலவிய மோசமான வானிலை காரணமாக, தரை இறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்கே திரும்பியுள்ளது. இந்த விமானம் இன்று காலை மீண்டும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பயணிகள் அனைவரும் சென்னையில் உள்ள விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஓ-100)

## பாலியாற்றுத்...

தெரிவித்தார். பாதீட்டு உரையில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை பல வருடங்களாகத் தீர்க்கப்படாதிருப்பதுடன் வெற்றிகரமான கருத்திட்டமெதுவும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. தற்போது காணப்படும் சிக்கலான பல்வகை நீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றாக ஏற்கனவே சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ள பாலி ஆறு நீர் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தக்கருத்திட்டத்தின் ஆரம்ப வேலைகளை 2024இன் முதல் அரை ஆண்டில் ஆரம்பிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வேலைகளுக்கு ரூபா 250மில்லியனை செலவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன் - என்றார்.

பாலி ஆறு நீர் கருத்திட்டம் வடக்கு மாகாணசபையில் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்தால் முன்மொழியப்பட்டு அனுமதிக்கப்பட்டு இது தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும் அண்மையில் பேசப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-40)


உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்
GINSOMIN®




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பனக்ஸ் ஜின்செங் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care
For Your Wellness
www.megawecare.lk

077 34 100 71
011 43 66 609

YouTube f
Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited


## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி விவகாரம்;

# முகநூலில் பதிவுக்கு எதிராக பேராசிரியர்கள் முறைப்பாடு

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பாக முகநூல் பதிவு தொடர்பாக நபரொருவருக்கு எதிராகப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் இருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தற்பொழுது கொழும்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் ஒருவருக்கு எதிராகவே இணைய வழி ஊடாக பொலிஸ் மா அதிபருக்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இணையத்தில் அவதூறு பரப்பியமை தொடர்பிலேயே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பேராசிரியர் ரங்கநாதன் கபிலன் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனடிப்படையில் குறித்த நபரை காங்கேசன் துறையில் உள்ள பொலிஸாரின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அலுவலகத்துக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கும் விசாரணைக்கு வருமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் உள்ளிட்ட இருவர் மேற்கொண்ட முறைப்பாடுகளையடுத்து அது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தது. இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பான முகநூல் பதிவு தொடர்பாகவே பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை - 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் நபர் ஒருவர் அவரது முகநூல் பக்கத்தில் அனுமதியின்றி எனது புகைப்படத்தை பிரசுரித்து உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டிருந்தார். அது தொடர்பில் முகநூல் நபருக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தேன். பொலிஸ் விசாரணைகளில் இருந்து தப்புவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் முள்ளிவாய்க்கால் தூபி தொடர்பில் தேவையற்ற விடயங்களை என் மீது திசை திருப்பி பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றது' என்று பேராசிரியர் வேல்நம்பி தெரிவித்தார். (அ-ஓ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகளில்

### இரட்ணகோபால் கனகம்மா



கடந்த (26.10.2022) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி இரட்ணகோபால் கனகம்மா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

29/43 அதிகாரி ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்

(CS 26876)(AK-1)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### முருகேசு தங்கவடிவேல்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், துன்னாலையை வசிப்பிடமாகவும் இருபாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முருகேசு தங்கவடிவேல் அவர்கள் நேற்று (13.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அன்புச் சகோதரனும், செந்தூரன் (உதவி அதிபர் - யா/ ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி) அவர்களின் அன்புத் தந்தையும், ரோகினி (ஆசிரியை - யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், தேஜஸ்வியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 9057 740

(CS 26935)A-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 . 02 . 1948 | | 13 . 11 . 2023 |



### நாகரத்தினம் ஜெகத்குருதாஸ்

**(Retired Pharmacist, Jaffna Hospital)**

உடுப்பிட்டி சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் முதலிகோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் ஜெகத்குருதாஸ் அவர்கள் நேற்று (13.11.2023) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகரத்தினம் ஜெகதலசெகசோதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஹம்சா, டிவ்யா (ஆசிரியை, BEEFORT மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்த்தீபன் (முகாமையாளர், இலங்கை வங்கி, மல்லாகம்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற சுவஸ்திகன் மற்றும் சுவஸ்திகா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற Dr.விமலகாந்தன் மற்றும் ஜெகன் மோகனதாஸ் (இளைப்பாறிய படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்றவர்களான நாகநந்தினி, சரவணபவா ஆகியோரின் அருமைச் சகோதரரும், உதயகுமாரி, சாந்தினி காலஞ்சென்ற ஆனந்தகுமார் மற்றும் ரஞ்சிதராணி, சிவராசா, ஆனந்தநடராஜா, சண்முகராஜா, காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் லீலாவதி, குணவதி ஆகியோரின் மைத்துனரும், ஜெயப்பிரதா, Dr.தனுசன், திலக்சன், தர்சன், காலஞ்சென்ற கோவர்த்தனன் மற்றும் யஸ்மிகா, கஜந், யசிகாந்த் ஆகியோரின் பெரியப்பாவும், மோகனப்பிரியா, கீர்த்தனப்பிரியா, தர்சனப்பிரியா, மதிசுதன் (SDB வங்கி, கிளிநொச்சி), யவனப்பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26936)A-1


# அரசுக்குப் பாரமாக மாறியுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம்

கொழும்பு, நவ. 14

அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஊடாக அரசாங்கத்துக்கு இலாபம் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் மொத்தப் பங்குகளில் 15 வீதம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானதாகும். ஆயினும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் இதுவரை எவ்வித இலாபத்தையும் ஈட்டாத காரணத்தால் அரசாங்கத்துக்கு வருவாய் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. இலங்கையில் அண்மைக்காலமாக நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத் தால் வருமானத்தை அதிகரித்து இலாபத்தை ஈட்ட முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பல வருமானம் ஈட்டும் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கவனம் செலுத்தியுள்ளார். அந்தத் திட்டங்கள் குறித்த விசேட கலந்துரையாடல் அமைச்சில் நடைபெற்றது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி மற்றும் முதலீட்டுச் சபையுடனான பல பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுட்டிக்காட்டினார். அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண துறைமுகங்கள் அமைச்சு தலையிடும் என அமைச்சர் குறிப்பிட்டார். இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை துறைமுகத்தில் நிறுத்தி மீள் ஏற்றுமதி செய்வதே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பிரதான செயற்பாடுகளாக இதுவரை காணப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)

## பௌதீகவியல் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம் கல்வி வலய அனுசரணையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்ட பௌதீகவியல் செய்முறை பயிற்சி முகாம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

பயிற்சி முகாமை கல்லூரியின் பிரதிஅதிபர் திருமதி செல்லகுணாளன் நாடாவெட்டி திறந்து வைத்தார். (ச-100)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 14

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்து வம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீநாக தம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் சி.கா.கமலநாதன் 'தலைமுடியை அறுத்து [illegible]பெருமானுக்கு விளக்கெரித்த [illegible] என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ம)

## மதகுடன் மோதி; ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மதகு தடுப்புக் கல்லுடன் மோதி தூக்கி வீசப்பட்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெற்பேலி, வன்னியர் கோவிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உசனைச் சேர்ந்த 56 வயது குடும்பத்தவர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கிளாலியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்புகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சடலத்தை சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (அ-ஒ-9)

## மூதாட்டி கொலை; சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

அல்வாயில் மூதாட்டியைக் கழுத்து நெரித்து கொலை செய்த சந்தேகநபர்கள் மூவரையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ. அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி அல்வாய் கிழக்கு அல்வாய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது-89) என்ற வயோதிப மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவ்வீட்டில் இருந்த கணவன், மனைவி மற்றும் வீட்டுப் பணிப்பெண் ஆகிய மூவர் நெல்லியடி பொலிஸாரால் இம் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று திங்கட்கிழமை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் விடுப்பில் உள்ளதன் காரணமாக பதில் நீதிவான் ஏ. அலெக்ஸ்ராஜா மூன்று சந்தேகநபர்களையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபையை...

'13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் அமைக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்குள்ளன. இதற்கு அமைவாக உயர்தரம் பயிலும் அனைவரும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக்கொள்ளமுடியும். 4 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று ரணில் தனது முன்மொழிவில் குறிப்பிட்டார்.

அதேபோன்று மத்திய அரசின் கீழ் இயங்கும் தொழில் கல்வி நிறுவனங்கள் மாகாணசபைகளுக்கு மாற்றப்படுவதோடு, திறன் விருத்தி மேம்பாட்டுத் துறையை மேம்படுத்தவும் நவீனப்படுத்தவும் மாகாண கல்விச் சபைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாணசபைகளால் சேகரிக்கப்படும் வருமானத்தை மாகாணத்தின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவினமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதாக ஜனாதிபதி பாதீட்டு உரையில் குறிப்பிட்டார்.

மாகாணசபைகளால் ஏற்றுமதிக் கைத்தொழிலை ஊக்குவிக்க முன்மொழியப்பட்ட 1990ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் கைத்தொழில்கள் தொடர்பான மாகாணசபைகளின் அதிகார வரம்புகள் திருத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த ஜனாதிபதி இதுவரை காலமும் மாகாணசபைகள் முதலீட்டுக்கு அனுமதிக்கும் எல்லையாக இருந்த 400 மில்லியன் ரூபா என்ற வரம்பை 600 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5)

## தேர்தல்...

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

அடுத்த வருடம் தேர்தல் உறுதியாகியுள்ளது. அந்தத்தேர்தலுக்குத் தயாராகும் வகையில் பாதீட்டில் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் முதல் அது வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ஏப்ரல் மற்றும் ஒக்ரோபருக்கு இடையில் தேர்தல் நடைபெறுவது உறுதியாகின்றது.

நாம் பயணிக்கவேண்டிய திசை எது? அந்தத்திசையை நோக்கிச் செல்ல வேண்டுமெனில் கடும் பொருளாதார மறுசீரமைப்பு அவசியம். அத்திசையை நோக்கிப் பயணிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. ஆனால், இதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதில்தான் பிரச்சினை உள்ளது. வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். விமானம் செல்வதுபோல் ஒரு திசையில் செல்லவேண்டும். ஆனால் ஏதேனும் சிக்கல் எனில் விமானம் கீழே விழுவதற்கான சாத்தியம் அதிகம். கடன் சுமை அதிகரித்துள்ளது. இதுபற்றி நாளை (இன்று) முழுமையாகத் தெளிவுபடுத்துவேன். யோசனைகள் சிலவேளை யோசனையாகவே இருக்கக்கூடும் - என்றார். (அ-ஒ-44)

## அரச...

களுக்கு தவணை அடிப்படையில் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்புத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார்.

அரச ஊழியர்களுக்கு தற்போது 7 ஆயிரத்து 800 ரூபா வாழ்க்கைச்செலவு கொடுப்பனவாக வழங்கப்படும் நிலையில், அடுத்த வருடம் முதல் 17 ஆயிரத்து 800 ரூபாவை வாழ்க்கைச்செலவு கொடுப்பனவாக பெறுவார்கள். அடுத்த ஆண்டு ஏப்ரல் மாத சம்பளத்தில் இருந்துதான் இந்த அதிகரிப்பு இடம்பெறும். ஜனவரி முதல் மார்ச் வரையான நிலுவை கொடுப்பனவு ஒக்ரோபர் மாதத்திலிருந்து தவணை அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் வழங்கப்படும்.

அரச ஊழியர்களுக்கு 2015ஆம் ஆண்டின் பின்னர் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. எனவே, அரசின் வரவு-செலவுத்திட்டத்தில் சமநிலை பாதிக்கப்பாத வகையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நான் முன்மொழிகின்றேன். தற்போது அரச ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 1.3 மில்லியன் ஆகும். அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 மில்லியனுக்கு அதிகமாகும்.

திறைசேரிக்கு குறித்த வருடத்துக்குரிய வருமானம் கிடைக்க ஆரம்பிப்பது பெப்ரவரி, மார்ச் மாதங்களிலாகும். எனவே, இக்கொடுப்பனவு அதிகரிப்பு ஏப்ரல் மாத சம்பளத்தில் இருந்துதான் சேர்த்துக் கொள்ளப்படும். ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான நிலுவைத் தொகை ஒக்ரோபர் மாதத்தில் இருந்து தவணை அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார்.

அதேவேளை, ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 7 இலட்சத்து 30 ஆயிரம் ஆகும். அவர்களுக்கு தற்போது வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவாக மாதாந்தம் 3 ஆயிரத்து 525 ரூபா வழங்கப்படுகின்றது. அரச ஓய்வூதியதாரர்களின் மாதாந்த வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு 6 ஆயிரத்து 25 ரூபா வரை அதிகரிக்கப்படும். இந்த அதிகரிப்பு 2024 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-ஒ-44)

## சட்டவிரோதக்...

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பான வழக்கு நேற்றையதினம் (திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் இவ்வாறு அதிரடி தீர்ப்பை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மகாவலி அதிகாரசபையால் கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுக்கப்பட்டிருந்தது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அத்துமீறிக் குடியேறியதாகத் தெரிவிக்கப்படும் 13 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, மகாவலி அதிகாரசபை சார்பாகவும் அத்துமீறிக் குடியேறியதாக குற்றம்சாட்டப்பட்ட பிரதிவாதிகள் சார்பாகவும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி தமது அறிக்கைகளை மன்றுக்குச் சமர்ப்பித்திருந்தனர். வாதங்களையும் சாட்சியங்களையும் நெறிப்படுத்திய நீதிபதி வழக்கின் தீர்ப்பை நேற்றையதினத்துக்கு ஒத்தி வைத்திருந்தார்.

இந்நிலையில் வழக்கு விசாரணை நேற்றைய தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் முன்னிலையில் இறுதித் தீர்ப்புக்காக மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அத்துமீறி குடியேறியதாகத் தெரிவிக்கப்படும் 13பேரும் நேற்றைய தினமும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். மகாவலி அதிகாரசபை சார்பாக அரச சட்டத்தரணி நில்காகினி சில்வா முன்னிலையாகியிருந்தார்.

அரச அதிகாரம் பெற்ற எந்த அதிகாரிகளின் ஆவணங்களும் நீதிமன்றுக்கு அத்துமீறி குடியேறியவர்கள் என குற்றம்சாட்டப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படாததால் மட்டக்களப்பு- மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய 13 பேரையும் வெளியேற்றுமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (அ-ஒ-100)

## ஆள்வோருக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.எம்.எப். உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வருவாய் இலக்குகளை நிறைவு செய்ய முடியாததால், இரண்டாவது ஐ.எம்.எப். கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில், ஏனோ தானோ என்ற அடிப்படையில் வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களை ஏமாற்றும் முயற்சி. வரவு - செலவுத் திட்டம் நரகமாக இருந்தாலும், ஆட்சியாளர்கள் சொர்க்கபுரியில் உள்ளனர். வரவு-செலவுத்திட்டத்தில் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் திட்டம் பற்றி பேசும் முன், 2022 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவில் எத்தனை விடயங்களை நிறைவேற்ற முடிந்தது என்பது குறித்து சிந்திக்கவேண்டும்.

வரவு - செலவுத் திட்ட உரையின் சில அம்சங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களை ஏமாற்றும் ஊடக நிகழ்ச்சி.

மேலும் சுபநேரத்தில் உரையாற்றப்பட்ட வரவு - செலவுத் திட்ட உரையின்படி ஆட்சியாளர்களுக்கு சொர்க்கத்தையும் நாட்டு மக்களுக்கு நரகத்தையும் இந்த வரவு - செலவுத் திட்டம் காட்டியுள்ளது. ஏப்ரல் மாதம் தொடக்கம் அரசிடம் பணம் இல்லாமல் போகும் என்பதால் இதனை நம்பி ஏமாறவேண்டாம். போலி வரவு - செலவுத் திட்டங்களை முன் வைத்து பௌத்தத்தை கேவலப்படுத்தி மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க வேண்டாம் என ஆட்சியாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ-ஒ-44)

## வடக்கு...

தாவது:-

வங்களா விரிகுடாவில் 2 காற்றுச் சுழற்சிகள் ஒரே நேரத்தில் தோற்றம் பெற்றுள்ளன. ஒன்று இலங்கையின் கிழக்கு கரையோரமாக மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இடைப்பட்ட கரையோரப் பிரதேசத்திலும் இன்னொன்று அந்தமான் தீவுகளுக்கு அருகாமையிலும் தோற்றம் பெற்றுள்ளன. இவையிரண்டும் ஒருங்கே இன்று அல்லது நாளை தாழமுக்கமாக வலுப்பெற்று வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில வளிமண்டல சூழ்நிலைகளினால் இரண்டும் ஒன்றும் சேராமல் விட்டாலும் இலங்கைக்கு அருகிலுள்ள காற்றுச்சுழற்சி வடமேற்கு திசையூடாக நகர்ந்து வடக்கு மாகாணத்தின் ஊடாக அரபிக் கடலுக்கும், அந்தமான் தீவுகளுக்கு அருகிலுள்ள காற்றுச் சுழற்சி வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து தமிழ் நாட்டின் வடபகுதி ஊடாகவும் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றும் நாளையும், நாளைமறுதினமும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் இடி மின்னலுடன் இணைந்ததான கனமழை கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. குறிப்பாக கடலோர மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மிகக் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளன. இன்றும் நாளையும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் திரட்டிய மழை வீழ்ச்சியாக 200 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்புள்ளன.

மேலும், இன்று காலை முதல் கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோ மீற்றருக்குக் கூடுதலாக வீச வாய்ப்புள்ளது. தரைப் பகுதியில் காற்றின் வேகம் 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும். (அ-ஒ-5-66)

## பாதீட்டின்...

திட்டத்தைத் துரிதப்படுத்தவும், வீடுகள் இன்றி தவிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் 500 மில்லியன் ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 35 வீதம் பெறப்படும். வடக்குக் கடலில் மீன்பிடித்துறையை மேம்படுத்த 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

பூநகரி நகர அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோய் உதவித்தொகை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

முதியோருக்கான மாதாந்த உதவித் தொகை 3 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படும்.

சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்க 10 பில்லியன் ரூபாவும் இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீதிகளையும், பாலங்களையும் புனரமைக்க 2 ஆயிரம் மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும். (அ-ஒ-26)

## காணாமல்...

பாதீட்டில் ஆயிரம் மில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் தெரிவித்ததாவது:-

உள்ளக மோதலால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போன 181 நபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஏற்கனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் 170 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளில், 6 ஆயிரத்து 300 நிகழ்வுகளுக்கான பூர்வாங்கப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒதுக்கீட்டுச் சட்டத்தில் இருந்து ஏற்கனவே ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்த ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறேன் - என்றார். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த மாதத்தில் மட்டும் 517 மில். அமெரிக்க டொலர்

கொழும்பு, நவ.14

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வெளிநாட்டு பணஅனுப்பல் மூலம் 517.4 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ருவிற்றர் பதிவொன்றில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளார்.

தாம் அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்ற, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இந்த வருடத்தின் ஒக்ரோபர் மாத இறுதி வரை, வெளிநாட்டு பண அனுப்பல் மூலம் 7.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஹமாஸ் - இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம்?

டெல்அவிவ், நவ. 14

வடக்கு காஸாவின் மத்திய பகுதிக்குள் இஸ்ரேல் படைகள் நுழைந்து அங்கு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், ஹமாஸ் படைகளுடன் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன என்று இஸ்ரேலியப் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

'ஹமாஸ் குழுவினர் பிணைக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக அவர்களுடன் சில ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படலாம். ஆனால் அது என்ன மாதிரியான ஒப்பந்தம் என்பதை இப்போதைக்கு வெளிப்படுத்த முடியாது. அது திட்டத்தையே சிதைத்து விடும். அதைப் பற்றி அதிகம் விவரம் தெரிவிக்காமல் இருப்பதே அது நிறைவேறுவதற் கான சாத்தியக் கூறை அதிகரிக்கும்' - என்றார். (ம)



# காஸா பேரழிவுகளுக்கு இஸ்ரேல் பொறுப்பல்ல!

## நேதன்யாகு திட்டவட்டம்

டெல்அவிவ், நவ. 14

காஸாவில் ஏற்படும் உயிர்ப் பலிகளுக்கும், அழிவுகளுக்கும் இஸ்ரேல் பொறுப்பாகாது என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் மக்ரோன், சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் 'காஸாவில் குண்டு வீசுவதை இஸ்ரேல் நிறுத்தவேண்டும். அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்கவேண்டும். குண்டு வீசுதலுக்கு எந்த நீதியும் கற்பிக்க முடியாது. போர் நிறுத்தம் இஸ்ரேலுக்கு ஆதாயம் தரும். ஹமாஸ் தீவிரவாதிகளின் இஸ்ரேல் மீதான தாக்குதலைக் கண்டிக்கிறோம். அதேவேளையில் இஸ்ரேல் தற்காப்புக்காக நடத்தும் தாக்குதலை ஆதரித்தாலும் காஸாவில் அப்பாவிகள் கொல்லப்படுவதை ஏற்கமுடியாது. போரை இஸ்ரேல் நிறுத்த வேண்டும். அமெரிக்கா போன்ற மற்ற நாடுகளின் தலைவர்களும் இதையே வலியுறுத்துவார்கள் என நான் நம்புகிறேன்' என்று கூறியிருந்தார்.

இதற்கு வழங்கியுள்ள பதிலிலேயே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'காஸாவில் பொதுமக்களுக்கு நேரும் அவலங்களுக்கு ஹமாஸ், ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அமைப்புகள் தான் பொறுப்பாகும். இஸ்ரேல் அதற்கு எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

ஹமாஸ் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எங்களின் மக்களை பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் அவர்கள் பிடியில் உள்ளனர். இது மனிதநேயத்துக்கு எதிரான குற்றமாகும். அதேபோல் பள்ளிகள், மசூதிகள், மருத்துவமனைகளை ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதலுக்கு திட்டமிடும் மையமாக மாற்றிவைத்துள்ளனர். இஸ்ரேல், அப்பாவி பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாவதைத் தவிர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் அதிகாரத்துக்கு உட்பட்டு எடுக்கிறது. பொதுமக்கள் போர்ப் பகுதிகளில் இருந்து வெளியேறத் தொடர்ந்து அறிவுறுத்துகிறது. ஆனால் ஹமாஸ் ஐ.எஸ். இணைந்து பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முடியாமல் தடுத்து அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றன - என்றார். (ம)


## வீடு தேவை

யாழ் நகரிலிருந்து 2-3 km தூரத்திற்குள் 3-4 படுக்கை அறை, முற்றத்துடன் கூடிய விசாலமான காணியுடன் வீடு தேவை.

0764767344




# 24 மணிநேரத்தில் 1,400 நிலநடுக்கம்

ஐஸ்லாந்தில் கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்து 400 தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அந்த நாட்டில் பல்வேறு இடங்களில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடஅட்லாண்டிக் கடலில் உள்ள தீவு நாடான ஐஸ்லாந்தில் 33 சீறும் எரிமலைகள் உள்ளன. எரிமலைகள் வெடிப்பதற்கு முன் அந்த நாட்டில் நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கமாகும். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஐஸ்லாந்தின் தென்மேற்கு ரெய்க்ஜென்ஸ் தீபகற்பத்தில் தொடர்ச்சியாக சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

24 மணி நேரத்தில் ஆயிரத்து 400 முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர். தொடர் நிலநடுக்கத்தால் எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களின் பாதுகாப்பு கருதி ஐஸ்லாந்து அரசு அவசர நிலையைப் பிரகடனம் செய்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்



### தங்கராஜா துரைராஜா

**(Formerly at Lawrie Muthu Krishna & Co., Colombo)**

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையையும் தற்போது குமாரசாமி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா துரைராஜா அவர்கள் கடந்த (10.11.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தங்கம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் (Former Assistant General Manager, Bank of Ceylon) பாசமிகு கணவரும், கலாநிதி நிராஜ் (Associate Professor, Northumbria University, UK), கலாநிதி நிரூஜா (Consultant, US) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராங் (Academic advisor), கலாநிதி பிரணவன் (Senior technical specialist) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிகையின் அன்புப் பேரனும், அருணகிரிராஜா (Former Deputy Director of Education), சுரேந்திரராஜா (Denmark) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமகள் (Former Teacher, Vembadi Girls' High School), அம்பிகா (Denmark), சிதம்பரநாதன் (F.C.A), செல்வராணி (US), சண்முகநாதன் (Germany), காலஞ்சென்ற திருச்செல்வநாதன், அனந்தராணி (Canada), சிவனேசநாதன் (UK), ஜீவராணி (UK), மதிவதனராணி (Canada), காலஞ்சென்ற தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2023 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**35/2, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 021 222 1139**

(CS 26919) A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.